சுருக்கம்

பொதுப்பணிகள் – தஞ்சாவூர் மாவட்ட நிலஅளவைப் பதிவேடுகள் துறை – திருமதி.நா.ரோகிணி, த/பெ காலஞ்சென்ற திரு.ஜி.நாதன் – கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்யப்பட்டது – பணியை வரன்முறை செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை
பணிகள் அலகு, பணி9(2) பிரிவு.

அரசாணை (3டி) எண்:06.

நாள்:10.01.2022
திருவள்ளுவராண்டு 2052
பிலவ வருடம், மார்கழி–26

படிக்கப்பட்டது:

நிலஅளவை மற்றும் நிலவரித்திட்ட இயக்குநரின் கடித எண்.ந.க.ஏ1/34664/2018 (நிலஅளவை), நாள் 26.12.2020.

******

ஆணை:

மேலே படிக்கப்பட்ட கடிதத்தில், நிலஅளவை மற்றும் நிலவரித்திட்ட இயக்குநர், தஞ்சாவூர் மாவட்ட நிலஅளவைப் பதிவடுகள் துறை உதவி இயக்குநர் அலுவலகத்தில் சார் ஆய்வாளராகப் பணியாற்றி பணியிடையே 07.07.2017 அன்று காலஞ்சென்ற திருஜி.நாதன் என்பவரின் இரண்டாவது மனைவி திருமதி.மகாலெட்சுமி என்பவர் தனது குடும்பத்தை பாதுகாக்கும் பொருட்டு தனது கணவரின் முதல் மனைவியின் இரண்டாவது மகள் திருமதி.நா.ரோகிணி, என்பவருக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கக் கோரி மூன்று ஆண்டு காலத்திற்குள் 04.03.2019 அன்று விண்ணப்பம் அளித்த நாளில் தனியர் திருமதி.நா.ரோகிணி என்பவர் 18 வயதினை நிறைவு செய்துள்ளார் என்றும், உரிய கல்வித் தகுதியான 10ம் வகுப்பு தேர்ச்சி (மார்ச் 2011) பெற்றுள்ளார் என்றும், திருமதி.நா.ரோகிணி என்பவருக்கும் மற்றும் அவரது கணவர் திரு.பாபு கணேஷ் என்பவருக்கும் இடையே ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக தாம்பரம் சார்பு நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு H.M.OP. எண். 817/2018–ன் 29.04.2019–ம் நாளிட்ட தீர்ப்பின்படி விவாகரத்து பெற்றுள்ளார் என்றும் தெரிவித்துள்ளார். மேலும், தனியருக்கு சென்னை, நில அளவை மற்றும் நிலவரித் திட்ட இயக்குநர் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணி வழங்கியுள்ளார் என்றும், தனியர் இளநிலை உதவியாளராக பணியேற்ற நாளான 01.06.2020 முற்பகல் முதல் பணியினை வரன்முறைப்படுத்தி அரசாணை பெற்றுத் தருமாறு அரசினைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

2. நிலஅளவை மற்றும் நிலவரித்திட்ட இயக்குநரின் கருத்துரு நன்கு ஆய்வு செய்யப்பட்டது. தஞ்சாவூர் மாவட்ட நில அளவை பதிவேடுகள் துறையில் சார் ஆய்வாளராகப் பணிபுரிந்து பணியிடையே 07.07.2017 அன்று காலஞ்சென்ற திரு.ஜி.நாதன் என்பவரின் மகள் திருமதி.நா.ரோகிணி என்பவருக்கு பணிநியமனத்திற்கு முன்னர் திருமணம் நடைபெற்றுள்ளதால், அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 23.01.2020–ன்படி இறந்த அரசுப் பணியாளரின்

// த.பி.பா //

திருமணமாகா பெண் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்க வழிவகை செய்யப்பட்டிருந்தாலும், அதற்கேற்ப தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016, பிரிவு 15–ல் திருத்தங்கள் செய்யப்படவில்லையாதலால் தனியர் பொருட்டு, தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016, பிரிவு 58–இன் கீழ் ஆளுநர் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி, தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016, பிரிவு 15–ஐ தளர்வு செய்தும், தனியர் பணியில் சேர்ந்த நாள் முதல், பணப்பலன்கள் பெற தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016, பிரிவு 28 (2)–னையும் தளர்வு செய்து தனியர் பணியேற்ற நாளான 01.06.2020 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் இனத்தில் பணிவரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது.

3. இவ்வாணை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையின் அ.சா.எண்.8729/க்யூ–2/2021–1, நாள் 20.05.2021 மற்றும் மனிதவள மேலாண்மைத் துறையின் அ.சா.எண்.15809/ஜி2/2021, நாள் 11.06.2021–ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

குமார் ஜயந்த்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
இயக்குநர், நிலஅளவை மற்றும் நிலவரித் திட்டம், சேப்பாக்கம், சென்னை–5
உதவி இயக்குநர், நிலஅளவைப் பதிவேடுகள் துறை, தஞ்சாவூர்.
திருமதி.நா.ரோகிணி, இளநிலை உதவியாளர், (உதவி இயக்குநர், நிலஅளவைப் பதிவேடுகள் துறை, தஞ்சாவூர் மாவட்டம் மூலமாக)
நகல்
தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, சென்னை–9.
மனிதவள மேலாண்மைத்துறை, சென்னை–9.
இருப்பிட தணிக்கை அலுவலர், சென்னை–9.
இருப்புக் கோப்பு/உதிரி.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.